5. அறிக்கைகள் அளித்தல்

அரசு உறுதிமொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ராஜா, அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர்.*

திரு. சி. ராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களால் நான் மக்களுக்காகவே நான் என்று வாழ்நாள் உள்ள வரை மக்களுக்காகவே வாழ்ந்து வந்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியை சிறப்பாக நடத்தி வரும் கொங்கு நாட்டுத் தங்கம், சேலத்துச் சிங்கம், எங்கள் மண்ணின் மைந்தர், எனது அரசியல் ஆசான் மாண்புமிகு முதல்வர் அவர்களையும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களையும் வணங்குகிறேன்.*

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2016-2018 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் பதினொன்றாவது முதல் இருபத்து ஆறாவது வரையிலான 16 அறிக்கைகளை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன். நன்றி.

முற்பகல் 11-20

6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் (இரண்டாவது திருத்தச்) சட்டமுன்வடிவு, 2018

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் (இரண்டாவது திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் (இரண்டாவது திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

7. முன்பண மானியக் கோரிக்கைள், 2018-2019, அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2018-2019 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளைப் பேரவைமுன் வைத்தல். மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2018-2019 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளைப் பேரவைமுன் வைக்கின்றேன்.*